1986 ஏப்ரல் 25]

திரு. எஸ். டேனியல் ராஜ் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான பி. எஸ். 2, பி. எஸ். 5, பி. எஸ். 6 ஆகிய 3 மீன்பிடி படகுகள் இப்போது மங்களூருக்கு அனுப்பப்படுவதால் அவற்றில் பணியாற்றி வந்த 20 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ? அந்த 20 மீனவர்கள் குடும்பங்களைச் சேர்ந்த 100 பேர்கள் குழந்தைகளும் தாய்மார்களும் பசியாலும் பட்டினியாலும் வாடுகிறார்கள். ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான 3 படகுகளும் சுருக்கு வலை மீன்பிடிப்பிற்கு ஏற்றவை. காரணம் இவ்வகையான மீன் பிடிப்புக்கு ஏற்ற அளவுக்கு கிழக்குக் கடற்கரையில் வாய்ப்பாக இல்லை. எனவே மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு வந்தது. அதில் பணியாற்றிய மீனவர்கள் பங்கு முறையில் மீன் பிடித்தார்கள். ஆகவே சரியான வருமானம் இல்லை, அவர்களும் மீன்பிடிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. படகுகளை மேற்குக் கடற்கரைக்கு எடுத்துச் சென்றதால் அவர்கள் தாங்களாகவே வேறு ஒரு படகில் பணிக்குச் சென்று விட்டார்கள். எனவே வேலை அளிக்கும் கேள்விக்கு இடம் இல்லாமல் இருக்கிறது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்புக் கொடுக்க இயலாது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அந்த மீனவர்களின் குடும்பங்கள் இன்றைக்குப் பசியாலும் பட்டினியாலும் வாடுவதால் அவர்களுக்கு மாற்று உதவிகள் செய்வதற்கு கடன் வழங்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையின் மூலமாக அவர்களுக்கு உதவி செய்கிற வாய்ப்பு ஏதாவது இருந்து அதை அவர்கள் கோரிக்கையாகக் கேட்பார்களானால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

### மீனவர்களுக்கு அடையாள அட்டைகள்.

567—(*வினா எண். 5386)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

[1986 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட தகுதி வாய்ந்த மீனவ பயனாளர்களுக்கு அடையாள அட்டைகள் தற்போது வழங்கப்படுகின்றன. அதே போல் முதலாவதாக, தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதி வாய்ந்த மீனவர் களுக்கு அடையாள அட்டைகள் வழங்க ஊரக வளர்ச்சித் துறை யில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(முற்பகல் 10-10)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, மீனவர்களுக்கு, அடையாள அட்டைகள் எந்த வகையான மீனவர் களுக்கு வழங்கப்படுகிறது? இதனால் மீனவர்களுக்கு என்ன பயன்? இராமேஸ்வரம் மீனவர்களுக்கு அடையாள அட்டை கள் வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? கடலில் காணாமல் போனவர்களுக்கும், இறந்த வர்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கு மொத்தத் தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பென்ஷன் வழங்கும் திட்டமும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சொந்தமாகக் கட்டுமரமும், நாட்டுப் படகும் மற்றும் வலைகள் இல்லாத மீனவர்கள் மற் றைய மீனவர்களுடன் தினம் கூலிக்கு மீன்பிடி தொழில் செய்ய வேண்டும்; ஒரு ஆண்டில் குறைந்த அளவில் ஆறு மாதங்கள் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும். (அ) மீனவர்கள் சொந்தமாக வலைகள் வைத்திருக்க வேண்டும். (ஆ) மீன் பொறிகள் இல்லாமல் இருக்கலாம். சொந்தமாக வைத்திருக்கும் மற்றைய மீனவர்களிடம் பங்கு அடிப்படையில் மீன்பிடி தொழிலைச் செய்ய வேண்டும். மீனவர்கள் ஒரேயொரு கட்டு மரம், நாட்டுப் படகு வைத்திருக்க வேண்டும். வலையும், வலை இல்லாமலும் இருக்கலாம். ஒரு இயந்திரப் படகு சொந்தமாகக் கொண்ட மீனவர்கள் வலையும், வலை இல்லாமலும் இருக்கலாம். இவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவது பற்றி இப் பொழுது பரிசீலித்து வருகிறோம். இந்த அடையாள அட்டை கள் வழங்குவதால் பலதரப்பட்ட மீனவர்களுக்கு வீடு ஒதுக்கீடு மற்றும் இயற்கைச் சேதத்தினால் ஏற்படும் நஷ்ட நிவாரணம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தவும், வறுமைக் கோட்டிற் குக் கீழே உள்ள மீனவர்களுக்குக் கடனிலும், உதவித் தொகை மூலம் நாட்டுப் படகு, கட்டுமரம் மற்றும் வலைகள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தவும் உதவியாக இருக்கும். இங்கே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கீழ்க்கண்ட தகுதி யில் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. ஆண்டு வரு மானம் 3,500 ரூபாய்க்குள் இருக்க வேண்டும்; இவ்வட்டைகள் பெறுவதற்கு குடும்பத்தை ஒரு யூனிட்டாக எடுத்துக் கொள்ளப் படும். இராமேஸ்வரம் மீனவர்களுக்கு இலங்கை கடற்

1986 ஏப்ரல் 25]

படையினால் ஏற்படும் தீமைகளைத் தவிர்க்கும் பொருட்டு அடையாள அட்டைகள் உடனடியாக வழங்க தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே இதுவரையில் தமிழ்நாட்டில் எத்தனை மீனவர்கள் இருக்கிறார்கள் ? எத்தனை மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன ? ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கே. வேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநிலத்திலுள்ள கரையோர மாவட்டங்களில் 402 மீனவக் கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமங்களில் மக்கள் தொகை 4 இலட்சம். இதில் 1 இலட்சம் பேர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். உள்நாட்டு மீனவர்களைப் பொறுத்த வரையில் இலட்சம் மீனவர்கள் இருப்பதாகத் தெரிகிறது. இதில் 60 சதவீதம் மீனவர்கள் மட்டும் மீன்பிடித்து வருகிறார்கள். இவர்களுக்கு இப்பொழுது தான் இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலே தான் கார்டுகள் வழங்கும் திட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம். ஒட்டுமொத்தமாக மீன்பிடி தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ள உள்நாட்டு மற்றும் கடல் மீனவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

### கடல்நீரை பாசனத்திற்குப் பயன்படுத்தல்.

568—(*வினா எண். 6589)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல் நீரை பாசனத்திற்கு பயன்படுத்துவது பற்றி ஆய்வு நடத்த ஒரு விஞ்ஞானிகள் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. யா சை. மு. யூசுப் : இல்லை.

திரு. பா. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காத மிகவும் நெருக்கடியான சூழ்நிலை ஆண்டுக்காண்டு வளர்ந்து வருகிறது. ஆகவே, தற்போது இல்லை என்று சொன்னாலும், இன்றைக்கு வெளிநாடுகளில் பார்க்கின்றபொழுது கடல் நீர் குடிநீராகவும், மற்றும் பாசனத்திற்காகவும் இன்னும் பல்வேறு இனங்களுக்காகவும் மாற்றப்பட்டு வருகிறது உலக நாடுகளில்,